1993 ஏப்ரல் 2]

நிலையில், அந்த பண்டுகளை இன்னும் திடப்படுத்தி பண்டுகளை உயர்த்தி, அந்த சில்ட்டுகளை எல்லாம் அப்புறப்படுத்தி, அங்கு இருக்கின்ற விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுப்பதற்கும், எந்த நேரத்திலேயும், எந்த வெயில் காலத்திலேயும் அந்தப் பறவைகளுக்கு எந்த நேரமும் தண்ணீர் இருக்கின்ற வகையில் அமைச்சர் அவர்கள் அந்த 3 கிலோமீட்டருக்கு அந்தப் பணியை செய்வார்களானால் தமிழகத்திற்கு அது மிகச் சிறப்பான வகையிலே அமையும். அமைச்சர் அவர்கள் இதனை துரிதமாக செய்ய ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேடந்தாங்கல் ஏரிக்கு நிரந்தரமாக நீர்வரத்து பற்றி நல்ல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே, தற்போது இருக்கின்ற நடைமுறையைவிட அவர் சொல்லியிருக்கின்ற நடைமுறையில் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்குமாயின் அந்த ஏரியினுடைய தரத்தை மேம்படுத்துவதற்கும், வரத்துக் கால்களை சீர்படுத்துவதற்கும் உத்திரமேரூர் பெரிய ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கும் ஆன 3 யோசனைகளையும் இந்த ஆண்டு, இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 230, திரு. பி. வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண். 231, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

231—

பூளைப்பதி கிராமத்தில் மின் விளக்கு வசதி

*11517—செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பொது பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி ஆதிவாசிகள் வாழும் பகுதியான பூளைப்பதி கிராமத்திற்கு மின் விளக்கு வசதி ஏற்படுத்தி தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி பூளைப்பதி கிராமத்திற்கு, தெருவிளக்கு வசதி கோரி சம்பந்தப்பட்ட ஊராட்சியிட மிருந்து விண்ணப்பம் ஏதும் மின்வாரியத்தால் பெறப்பட வில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டதும் தக்க நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே பூளைப்பதி கிராமத்திற்கு உரிய வெப்பம் மூலம் மின் விளக்கு அமைக்க அனுமதி கொடுக்கப் பெற்றும் அந்தப் பணி நடைபெறவில்லை. ஆகவே, மலைப் பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்கள் பாம்பு, பூரான் போன்ற விஷ ஜந்துக்களால் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். ஏழை எளிய மலைவாழ் மக்கள் நலனில் மிகவும் அக்கறையுடன் செயல்படும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சூரிய வெப்ப மின் விளக்கு அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமம் மலைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு செட்டில்மெண்ட் குடியிருப்பு ஆகும். நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளதை போல, மின் விளக்கு வசதி பெறுவதற்கு ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் வர வேணடும். அது தவிர இந்தக் கிராமம் காடுகளுக்கிடையே இருப்பதால் அங்கே மின் கம்பங்களை நிறுவுவதற்கு வனத்துறையின் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அவர்களுடைய அனுமதியைப் பெற்றுத் தான் நாம் மின் கம்பங்களை நிறுவ முடியும். அகவே, அவர்கள் சொல்லியிருக்கின்ற யோசனை, சூரிய வெப்பத்தின் மூலம் ஏற் படுகின்ற மின்சாரத்தை எடுத்து கொடுக்கலாமே என்று கேட் டிருக்கிறார்கள். அது பற்றியும் ஆராயலாம். அது தவிர வனத்துறையின் அனுமதி பெற்று அங்கே மின் கம்பங்களை நட்டு மின் வசதி கொடுப்பதற்கும் ஆராயலாம். ஆகவே, இது சம் பந்தமாக இந்த ஆண்டிலேயே நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத் தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிவாசிகள், பழங்குடி மக்கள், மலைப் பிரதேசங்களில் இருக்கக் கூடிய இந்தப் பகுதி மக்கள்

மின் இணைப்பு கேட்கும்போது அங்குள்ள வனத்துறை ஆட்சேபம் தெரிவிக்கிறது. இதன் காரணமாக, காலம் காலமாக அந்தப் பகுதிக்கு மின் விளக்கு கொடுக்க முடியவில்லை. ஆகவே, வனத்துறையினுடைய சட்டத்தைத் திருத்தினால் தான் அவர்களுக்கு மின் விளக்குப் போட்டுக் கொடுக்க முடியும் என்ற ஒரு சூழ்நிலை உள்ளது. ஆகவே, மின் விளக்குகள் குறித்து மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையின் அனுமதியைப் பொறுத்த மட்டிலே, மத்திய அரசுதான் அனுமதி தரவேண்டியிருக்கிறது. ஆகவே, சாலைகள் போடுவதிலே சில நேரங்களில் 'காட்' ரோடு என்று சொல்லப் படுகின்ற மலைச் சாலைகள் போடும் போதும் இந்தப் பிரச்சனை வருகிறது. மின்சார கம்பங்கள் நடுகின்ற போதும் இந்தப் பிரச்சினை வருகிறது. ஏன் என்றால் அவர்களுடைய பகுதியிலே நடுவதற்கு அவர்களுடைய அனுமதியைப் பெறவேண்டும். ஆகவே, இது மத்திய அரசோடு கலந்து முடிவு செய்ய வேண்டிய பிரச்சினை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 232, திரு. ஏ.எம். பரமசிவன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

232—

மதுரையில் நவீனப் பேருந்து நிலையம் அமைத்தல்

*9080— திரு ஏ. எம். பரமசிவன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ் மதுரை மாநகரின் பேருந்து நெரிசலைத் தவிர்க்க கம்போஸ்ட் உரக்கிடங்கு பகுதியில் நவீன பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை நகரில் நவீன பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் சென்னை திட்ட மேலாண்மைக் குழுமத்திடம் (Project Management Group) ஆய்வில் உள்ளது.